# திருவாரூர் மாவட்டத்தில் ரூ.846.47 கோடியில் 1,234 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தார்!

# 2,423 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 67,181 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**திருவாரூர், ஜுலை 12–**

**திருவாரூர் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில் ரூ.846.47 கோடி மதிப்பீட்டிலான 1,234 முடிவுற்ற பணி-களை திறந்து வைத்து, 2,423 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 67,181 பயனாளிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.7.2025) திருவாரூர் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில் 73 கோடியே 74 இலட்சம் ரூபாய் செலவில் 1,234 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, 172 கோடியே 18 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 2,423 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 600 கோடியே 55 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை 67,181 பயனாளிகளுக்கு வழங்கினார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.7.2025) திருவாரூர் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில், 600 கோடியே 55 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை 67,181 பயனாளிகளுக்கு வழங்கிய நிகழ்வில், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில், முதலமைச்சர் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தில், பயனாளிகளுக்கு வைப்புத்தொகைகளுக்கான ரசீதுகளை வழங்கினார். இந்த விழாவில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர்.கோவி.செழியன், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர். டி.ஆர்.பி.ராஜா, தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் வை.செல்வராஜ், முரசொலி, சட்டமன்ற உறுப்பினர்கள் பூண்டி.கே.கலைவாணன், கே.மாரிமுத்து, திருவாரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் வ.மோகனச்சந்திரன், தாட்கோ தலைவர் இளையராஜா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### திருவாரூர் மாவட்டத்தில் திறந்து வைக்கப்பட்ட முடிவுற்ற பணிகளின் விவரங்கள்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை சார்பில், திருவாரூர் மாவட்டத்தின் புதிய ஊராட்சி மன்ற அலுவலகங்கள், பொது விநியோகக் கட்டடங்கள், அங்கன்வாடி கட்டடங்கள், கோ-லொகேஷன் சென்டர், பள்ளிக் கட்டடங்கள், பொது நூலகக் கட்டடங்கள், பேருந்து நிழற்குடைகள், மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள், நேரடி கொள்முதல் நிலையங்கள், கலைஞர் கனவு இல்லத் திட்டத்தின் கீழ் புதிய வீடுகள் என மொத்தம் 42 கோடியே 8 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் செலவில் 1209 முடிவுற்ற பணிகள்;

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில், திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில் 9 கோடி ரூபாய் செலவில் கூடுதல் கட்டடம், மன்னார்குடி அரசு தலைமை மருத்துவமனையில் 1 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் மாவட்ட ஒருங்கிணைந்த பொது சுகாதார ஆய்வகம், விஜயபுரம் அரசு தாய் சேய் நல மருத்துவமனையில் 6 கோடி ரூபாய் செலவில் சீமாங்க் கட்டடம்,

ஆதிச்சபுரத்தில் 50 இலட்சம் ரூபாய் செலவில் பொது சுகாதார அலகு கட்டடம், பெரும்புகலூரில் 20 இலட்சம் ரூபாய் செலவில் துணை சுகாதார நிலையம், கூத்தாநல்லூரில் 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம்;

பள்ளிக் கல்வித் துறை சார்பில், கடுவங்குடி அரசு மேல்நிலைப்பள்ளியில்

52 இலட்சத்து 22 ஆயிரம் ரூபாய் செலவில் கலை பண்பாட்டு அறை, ஆய்வகம் மற்றும் நூலகம் கட்டடங்கள்: பொது நூலகத் துறை சார்பில், உள்ளிக்கோட்டை, கூப்பாச்சிக்கோட்டை மற்றும் எடையூர் ஆகிய இடங்களில் 66 இலட்சம் ரூபாய் செலவில் கிளை நூலகங்கள்;

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் நன்னிலம் பேரூராட்சி, மணவாளன்பேட்டையில் 19 இலட்சம் ரூபாய் செலவில் 30,000 லிட்டர் கொள்ளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி;

கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் கொற்கை கால்நடை பண்ணையில் 1 கோடியே 1 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாய் செலவில் வற்றுப் பசுக்களுக்கான வலுவூட்டப்பட்ட கான்கிரீட் கொட்டகை, 1 கோடியே 1 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாய் செலவில் கறவைப் பசுக்கள் மற்றும் கன்றுகளுக்கான கான்கிரீட் கொட்டகை,

25 இலட்சம் ரூபாய் செலவில் பண்ணை மேலாளர் அலுவலகக் கட்டடம், 30 இலட்சம் ரூபாய் செலவில் கறவைப் பசுக்களுக்கான கொட்டகை;

வேளாண் மற்றும் உழவர் நலத் துறை சார்பில் திருவாரூர், உதயமார்த்தாண்டபுரம், கட்டிமேடு, எடையூர் ஆகிய இடங்களில் 2 கோடியே 10 லட்சம் ரூபாய் செலவில் விதைக் கிடங்குகள், திருவாரூரில் 1 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் அரசு வேளாண் கருவிகள் மற்றும் பணிமனை அலுவலகக் கட்டடம், குடவாசல் மற்றும் கொரடாச்சேரி ஆகிய இடங்களில் 3 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் உரக்கிடங்குகள்;

வனத்துறை சார்பில், திருவாரூர் மாவட்ட பெருந்திட்ட வளாகத்தில் 1 கோடியே 16 இலட்சம் ரூபாய் செலவில் வனத் தீ கட்டுப்பாட்டு மையக் கட்டடம் மற்றும் திருவாரூர் வனக்கோட்டம், முத்துப்பேட்டை சரகத்தில் படகு குழாம் மற்றும் சுற்றுலா பயணிகளுக்கான அடிப்படை கட்டமைப்புப் பணிகள்;

பதிவுத்துறை சார்பில், திருவாரூர் பதிவு மாவட்டத்தில் கூத்தாநல்லூரில் 1 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் சார் பதிவாளர் அலுவலகக் கட்டடம்; என மொத்தம் 73 கோடியே 74 இலட்சம் ரூபாய் செலவில் 1234 முடிவுற்றப் பணிகளை முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் திறந்து வைத்தார்.

### திருவாரூர் மாவட்டத்தில் அடிக்கல் நாட்டப்பட்ட பணிகளின் விவரங்கள்:-

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை சார்பில், திருவாரூர் மாவட்டத்தில், கலைஞரின் கனவு இல்லத் திட்டத்தின் கீழ் 2150 புதிய வீடுகள், அயோத்திதாச பண்டிதர் குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம், குழந்தை நேய பள்ளிகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டம், நபார்டு திட்டம், முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் 129 கோடியே 11 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 2,328 புதிய திட்டப் பணிகள்;

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில், பேரளம், ராயபுரம் கொட்டாரக்குடி ஆகிய இடங்களில் 4 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஆரம்ப சுகாதார நிலையங்கள், பூந்தோட்டம், பெரும்பண்ணையூர், ஆலத்தம்பாடி ஆகிய இடங்களில் 1 கோடியே 95 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், பொது சுகாதார அலகுக் கட்டடங்கள், ஆலங்குடி மற்றும் எடமேலையூர் ஆகிய இடங்களில் 90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலையங்கள், நீடாமங்கலம் மற்றும் குடவாசல் ஆகிய இடங்களில் 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அரசு மருத்துவமனைக் கட்டடங்கள்;

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 8 கோடியே 17 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 86 தார்ச்சாலைகள் மேம்படுத்தும் பணிகள், குளுந்தான் குளத்தை 1 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணிகள், சந்தானம் நகரில் 77 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பூங்கா மேம்படுத்தும் பணிகள்,

தியாகபெருமாநல்லூரில் 5 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பேருந்து நிலையம் மேம்படுத்தும் பணிகள், கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தில் 1 கோடியே 77 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள், கொரடாச்சேரி, பேரளம் மற்றும் நன்னிலம் ஆகிய பேரூராட்சிகளில் 3 கோடியே 91 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தார்ச்சாலைகள் அமைக்கும் பணிகள், நன்னிலம் பேரூராட்சி, மாரியம்மன் கோவில் தெருவில் 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தெருநாய்கள் கருத்தடை அறுவை சிகிச்சை மையம், வலங்கைமான், நீடாமங்கலம், குடவாசல் ஆகிய பேரூராட்சிகளில் 3 கோடியே 24 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தார்ச்சாலைகள் மற்றும் பேவர் பிளாக் சாலைப் பணிகள்;

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை சார்பில், திருத்துறைப்பூண்டி வட்டம், கொருக்கை ஊராட்சியில், 3 கோடியே 90 இலட்சத்து 39 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் நரிக்குறவர் இன மக்களுக்கு 77 புதிய வீடுகள் அமைக்கும் பணிகள்;

என மொத்தம் 172 கோடியே 17 இலட்சத்து 59 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 2,423 புதிய திட்டப் பணிகளுக்கு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

### திருவாரூர் மாவட்டத்தில் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கிய விவரங்கள்

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில், 9325 பயனாளிகளுக்கு விலையில்லா வீட்டுமனைப் பட்டாக்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில், 7377 பயனாளிகளுக்கு கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் வீடுகள், ஊரக வீடுகள் சீரமைப்பு திட்டம் மற்றும் முதலமைச்சரின் வீடுகள் மறுகட்டுமானத் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் உதவிகள், மகளிர் திட்டத்தின் சார்பில் 10,000 பயனாளிகளுக்கு சுய உதவிக்குழு வங்கி நேரடிக் கடன்கள், நலிவு நிலை குறைப்பு நிதி. சமுதாய முதலீட்டு நிதி சுழற்சி முறை கடன்கள் வழங்குதல், வேளாண் மற்றும் உழவர் நலத்துறை சார்பில், 25,525 பயனாளிகளுக்கு குறுவை சிறப்பு தொகுப்பு திட்டத்தின் கீழ் உதவிகள், தாட்கோ சார்பில், 2078 பயனாளிகளுக்கு நான்கு சக்கர வாகனம், கறவை மாடு வாங்க மானியத்துடன் கூடிய கடனுதவிகள், நன்னிலம் மகளிர் நில உடமை திட்டத்தின் கீழ் இரண்டு ஏக்கர் நிலம் வாங்க மானியத்துடன் கூடிய கடனுதவி, தமிழ்நாடு தூய்மை பணியாளர் நல வாரியத்தின் சார்பில் அடையாள அட்டைகள் வழங்குதல்,

மாற்றுத்திறனாளிகள் நலத் துறையின் சார்பில், 113 பயனாளிகளுக்கு வங்கிக்கடன் மானியம், காதொலிக் கருவிகள், செயற்கைக்கால்கள், தையல் இயந்திரங்கள், சக்கர நாற்காலிகள், தனியார் தொண்டு நிறுவனங்களில் பணிபுரியும் சிறப்பாசிரியர்களின் ஊதியம் மற்றும் தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டைகள் வழங்குதல், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை சார்பில், 60 பயனாளிகளுக்கு விலையில்லா தையல் இயந்திரங்கள், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் 9,354 பயனாளிகளுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்கள், மகப்பேறு நிதி உதவிகள், கர்ப்பணிகளுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்கள், கண்ணொளி காப்போம் திட்டத்தில் உதவிகள், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை சார்பில் 761 பயனாளிகளுக்கு திருமண உதவித் தொகை, கல்வி உதவித் தொகை, விபத்து மரண நிதி உதவித் தொகை, இயற்கை மரண நிதி உதவித் தொகை, அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்குதல், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை சார்பில், 100 குழுக்களுக்கு நுண்கடன் வழங்குதல்;

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறை சார்பில், 1041 பயனாளிகளுக்கு சலவைப்பெட்டிகள், தையல் இயந்திரங்கள், தனிநபர் கடன்கள், குழுக் கடன்கள், சீர்மரபினர் நல வாரிய உறுப்பினர்களுக்கு அடையாள அட்டைகள், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில், 610 பயனாளிகளுக்கு முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் உதவிகள், மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சார்பில், 500 பயனாளிகளுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டைகள், கூட்டுறவுத் துறை சார்பில், 337 பயனாளிகளுக்கு மகளிர் சுய உதவிக் கடன்கள், மத்திய கால விவசாயக் கடன், தாட்கோ கடன் மற்றும் பண்ணை சாரா கடன் என பல்வேறு துறைகளின் சார்பில் 600 கோடியே 55 இலட்சத்து 28 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை 67,181 பயனாளிகளுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

இந்த விழாவில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர்.கோவி.செழியன், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர். டி.ஆர்.பி.ராஜா, தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் வை.செல்வராஜ், முரசொலி, சட்டமன்ற உறுப்பினர்கள் பூண்டி.கே.கலைவாணன், கே.மாரிமுத்து, திருவாரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் வ.மோகனச் சந்திரன், தாட்கோ தலைவர் இளையராஜா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதி, கந்திலி ஒன்றியத்தில்

# மகளிர் பேருந்து துவக்கம், ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடம்!

## அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

*திருப்பத்தூர், ஜுலை 12-*

*முதலமைச்சர் அவர்களின் மக்கள் நலத்திட்டத்தில் பல்வேறு துறைகளின் வாயிலாக மக்களுக்கு நலத்திட்ட பயன்கள் சென்றடைகின்றது.*

*திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் நல்லதம்பி தொடர்ந்து மக்களை சந்தித்து குறைகள் கேட்டறிந்து நிகழ்ச்சிகளில் கலந்து வருகின்றார். அதன் தொடர்ச்சியாக கொண்டு கந்திலி ஒன்றியம், சுந்தரம்பள்ளி ஊராட்சி மன்ற அலுவலகத்திற்காக திட்டத்தின் கீழ் 30 லட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டிடம் கட்டப்பட்டது. இந்த கட்டிடத்தை சட்டமன்ற உறுப்பினர் அ.நல்ல தம்பி திறந்து வைத்தார்.*

*ஏற்கனவே இருந்த கட்டிடம் பழுதடைந்து பயன்படாத நிலையில் புதிய கட்டிடம் கட்ட வேண்டுமென ஊராட்சிமன்ற நிர்வாகக் கோரிக்கை வைத்து அதற்காக அரசின் கவனத்திற்கு கொண்டு சென்று கட்டிடம் கட்ட சட்டமன்ற உறுப்பினர் அனுமதி பெற்று தந்து கட்டிடம் கட்டப்பட்டது. அதன் திறப்பு விழா ஊராட்சி மன்ற தலைவர் விஜய லட்சுமி கருணாநிதி தலைமையில் நடைபெற்றது.*

*மேலும், நத்தம் ஊராட்சி மன்ற தலைவர் ர.குமார் தலைமையில் நத்தம் ஊராட்சியில் சுந்தரம் பள்ளி முதல் நத்தம் வரை அரசு பேருந்து வழித்தடம் நீட்டிக்கப்பட்டது உடன் ஒன்றிய பொது நிதியிலிருந்து 3.5இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக அமைக்கப்பட்ட 30 மின்விளக்குகளை எம்.எல்.ஏ. நல்லதம்பி துவக்கி வைத்தார்.*

*இந்நிகழ்ச்சியில், வட்டார வளர்ச்சி உ.பால முருகன், வி.சதானந்தம், ஒன்றிய செயலாளர்கள். கே.ஏ.குணசேகரன், அலுவலர்கள். கே.முருகேசன், கந்திலி ஒன்றிய சேர்மன் திருமதி திருமுருகன், துணை சேர்மன். மோகன்குமார், ஊராட்சி மன்றதலைவர். விஜய லட்சுமி கருணாநிதி, ஒன்றிய கவுன்சிலர். சாந்தாசண்முகம், சு.அரசு, ஒ. அவைத்தலைவர், ஆனந்தன், கிளை செயலாளர்கள் மற்றும் கழக தோழர்கள், வார்டு உறுப்பினர்கள், பொது மக்கள் கலந்து கொண்டனர்.*

*இந்நிகழ்ச்சியின் இறுதியில் நீண்டநாள் கோரிக்கையினை நிறைவேற்றித்தந்த திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினருக்கு பொதுமக்கள் நன்றி தெரிவித்தனர்.*



திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி கந்திலி ஒன்றியத்தில் மகளிர் பேருந்து துவக்கம், ஊராட்சிமன்ற அலுவலக கட்டிடத்தை ஏ. நல்லதம்பி எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். இதில் கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**திடக்கழிவு மேலாண்மை துறை**

தி.க.மே. து. ந. க. எண். அ7/7647/2024 **ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை**

திடக்கழிவு மேலாண்மை துறையில் ஒப்பம் கோர மேற்பார்வை பொறியாளர் (திகமே) அவர்களால் வரவேற்கப்படுகின்றன.

| பணிகளின் விவரம் | பணியின் மதிப்பு | முன்வைப்பு தொகை |
| --- | --- | --- |
| மண்டலம் - 7ல் அத்திப்பட்டு குப்பை கிடங்கில் கூடுதலான உலர் கழிவுகள் Bio-mining முறையில் மேற்கொள்ளும் பணி | ரூ. 6.94 கோடி | ரூ. 6.94 இலட்சம் |
| ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கும் கடைசி நாள் | 24.07.2025 பிற்பகல் 3.00 மணிக்குள் | |
| ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் | 25.07.2025 பிற்பகல் 4.00 மணிக்கு | |

ஒப்பந்ததாரர்கள் **http//tntenders.gov.in** இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து விவரங்கள் தெரிந்து கொள்ளலாம். முன்வைப்பு தொகை **E Tender portal** மூலம் **online** பரிவர்த்தனை முறையில் செலுத்த வேண்டும். விவரங்கள் ஒப்ப ஆவணம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ/3578/ஒப்பந்தப்புள்ளி/2025 **மேற்பார்வை பொறியாளர் (திகமே)**


---

### அரசியலமைப்பு கிளப் நிர்வாகிகள் தேர்தல்!

# கலாச்சாரப் பிரிவு செயலாளராக!

## திருச்சி சிவா ஒருமனதாகத் தேர்வு!



*புதுடெல்லி, ஜுலை 12-*

*டெல்லியில் மக்களவைத் தலைவர் தலைமையில் செயல்படும் அரசியலமைப்பு கிளப் (constitution club) நிர்வாகிகளுக்கான தேர்தலில் மாநிலங்களவை கழக குழுத் தலைவர் திருச்சி சிவா செயலாளர் (கலாச்சாரம்) பொறுப்புக்கும், செயலாளர் (விளையாட்டு) பொறுப்பிற்கு BCCI ல் தலைவராக இருக்கும் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த ராஜீவ் சுக்லாவும் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.*

*தமிழ்நாட்டிலிருந்து, குறிப்பாக தி.மு.கழகத்திலிருந்து இந்த முக்கிய பொறுப்புக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் நாடாளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவா என்பது குறிப்பிடத்தக்கது!*

---

### திருவாரூர் மாவட்ட இலக்கிய அணி தலைவர்

# மிசா அண்ணாதாசன் (எ) மாரிமுத்து மறைவு!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜுலை 12–

திருவாரூர் மாவட்ட இலக்கிய அணித் தலைவர் மிசா அண்ணாதாசன் என்கிற மாரிமுத்து நேற்று முன்தினம் இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தியறிந்ததும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரது குடும்பத்தாருக்குத் தெரிவித்துள்ளார்.

மறைந்த அண்ணாதாசன் என்கிற மாரிமுத்து தி.மு.கழகத்தின் தொடக்க கால உறுப்பினராவார். மிசாவில் சிறைவாசம் சென்றவர்.

மேலும் கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.